# விளம்பரம்

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தில் சுற்றுலா விடுதிக் காப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தில் சுற்றுலா விடுதிக் காப்பாளர் பதவியில் தற்போதுள்ள 01 வெற்றிடத்தைத் திறந்த அடிப்படையில் நிரப்புவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கட்டளைக்கு அமைய பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) விண்ணப்பங்கள் கிடைப்பதற்கான இறுதித் திகதி 23.04.2026 ஆகும்.

குறிப்பு : விண்ணப்பம் அல்லது தொடர்புடைய கடிதம் தொடர்பாக தபாலில் காணாமற்போதல் அல்லது தாமதம் பற்றிய முறைப்பாடு எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப் படிவத்தை இறுதித் திகதி வரை தாமதிப்பதால் ஏற்படக்கூடிய இழப்புகளை விண்ணப்பதாரரே ஏற்றல் வேண்டும்.

**01. சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், தற்போதுள்ள வெற்றிடத்தை (01) நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்.

வெற்றிடங்களுக்கான எண்ணிக்கையின் இரண்டு மடங்குக்குக் குறையாத எண்ணிக்கையுடைய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**02. தகைமைகள்**

(i) சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் 8 ஆம் வகுப்புக்குரிய அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ii) பிற மொழிகளிலான தேர்ச்சி ஒரு மேலதிகத் தகுதியாக கருதப்படும்.

(iii) ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய முறைகளில் சமையல் பற்றிய நல்ல அறிவு இருத்தல் வேண்டும்.

(iv) வாடிவீடுகள் மற்றும் விடுதிகளில் உணவுகளும் பானங்களும் தயாரித்து வழங்குதல், துப்புரவு பேணுதல் மற்றும் விருந்தினர்களை முறையாக வரவேற்றல் பற்றி நன்கு அறிந்த விண்ணப்பதாரர்களது அனுபவம் விசேடமாகக் கருதப்படும்.

(v) அங்கீகரிக்கப்பட்ட வெளியக நிறுவனமொன்றில் சமமான பதவியில் ஆகக்குறைந்தது 3 வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(vi) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(vii) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாகவும், சிறந்த நடத்தை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

03. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்

(i) இந்த பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடன் கூடியதும் ஆகும். விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குரிய பங்களிப்பு வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த நியமனம் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டது.

(iii) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமும் அதனோடிணைந்த மற்றைய சுற்றறிக்கைகளின் பிரகாரமும் அரசகரும மொழிகளில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) இந்நியமனம் அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், நிதி ஒழுங்குவிதிகள், தாபனக் கோவையின் ஏற்பாடுகள், திணைக்கள ஆணைகள், அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள மற்றும் இனிமேல் வெளியிடப்படும் ஆணைகளுக்கு உட்பட்டதாகும்.

**04. வயதெல்லை**

18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**05. சம்பள அளவுத்திட்டம்**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், இந்த நியமனத்திற்கு உரித்தான மாதாந்த சம்பளத்திட்டம் பின்வருமாறு - ரூ 40000-10x450-10x490-10x540-12x590-61880 (PL-1-2025)

**06. விண்ணப்பதாரரின் ஆளடையாளம்:**

அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

அனைத்துச் சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளுடன், முறையாகச் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும். பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களுக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

தகைமைகளை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சையில் ஒருவரின் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

**07. விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்தல்:-**

(i) விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னர் மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 23.04.2026 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அன்றைய தினத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) அரசாங்க அமைச்சில் அல்லது திணைக்களத்தில் சேவையாற்றும் விண்ணப்பதாரி ஆயின், தனது விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, திணைக்களத் தலைவருடாக, 23.04.2026 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(iii) மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் ஒத்துப்போகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்து போவது அல்லது தாமதமடைவது குறித்த எந்த முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**08. தவறான தகவல்களை வழங்குதல்:-**

நீங்கள் அனுப்பும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன் பொய்யானதாகவோ அல்லது தவறானதாகவோ கண்டறியப்பட்டால், உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ஆட்சேர்ப்பின் பின்னர் அத்தகைய பொய்யான அல்லது தவறான தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டால், உரிய நடவடிக்கைக்கு உட்பட்டு எந்த நேரத்திலும் சேவையிலிருந்து நீக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏதேனும் வெற்றிடங்களையோ அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அல்லது நிரப்பாமல் விடுவதற்கு அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு உரிமை உண்டு.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கட்டளைக்கு அமைவாக.

**அரசாங்க தலைமை விலைமதிப்பீட்டாளர்,**
**அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களம்.**

---

### அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தில் சுற்றுலா விடுதிக் காப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்

அலுவலகப் பயன்பாட்டிற்கு ☐

விண்ணப்பிக்கும் மொழி மூலம் - ☐
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3

1. விண்ணப்பதாரரின் பெயர், முதலெழுத்துக்களுடன்:-
..........................................................................
2. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :-
..........................................................................
3. தேசிய அடையாள அட்டை இல. :-
..........................................................................
4. நிரந்தர முகவரி :-
..........................................................................
5. பிறந்த திகதி :-
..........................................................................
6. 2026.04.23 திகதியன்று வயது :- வருடம்:.............. மாதம்: ............... நாள்:...................
7. தொலைபேசி இல:- கைத்தொலைபேசி .................................. நிரந்தர ..............................
8. தற்போது அரச நிறவனமொன்றில் சேவையாற்றினால்,
வகிக்கும் பதவி: .................................... வகுப்பு ...................... தரம்: ...................
முதல் நியமனத் திகதி:- ......................... முதல் நியமனப் பதவி:- ..................................
9. கல்வித் தகைமைகள்:- (நிறுவனத்தின் பெயரையும், உரிய வருடத்தையும் குறிப்பிடுக)
9.1. கடைசியாகச் சித்தியடைந்த பரீட்சை - ..........................................................................
9.2. க.பொ.த. (சா.த.) - பெறுபேறுகள்
வருடம் - ........................................... சுட்டிலக்கம்-................................................

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | | 6 | |
| 2 | | 7 | |
| 3 | | 8 | |
| 4 | | 9 | |
| 5 | | 10 | |

க.பொ.த. (உ.த.) - பெறுபேறுகள்
வருடம் - ........................................... சுட்டிலக்கம்- ................................................

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | | 3 | |
| 2 | | 4 | |

1. தொழிற் தகைமை:-
..........................................................................
..........................................................................
..........................................................................
2. பதவிக்கு உரியதாகப் பெற்றுள்ள அனுபவம்:-
..........................................................................
..........................................................................
..........................................................................
3. வேறு தகைமைகள்:-
..........................................................................
..........................................................................
..........................................................................
4. நீங்கள் எப்போதாவது, ஏதாவது குற்றச்சாட்டுக்காக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களா? (உரிய கூட்டினுள் √ அடையாளமிடுக. ஆம் எனின், விபரங்களைத் தருக)
ஆம் ☐ இல்லை ☐

14. விண்ணப்பதாரியின் சான்றுப்படுத்துதல் :-

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், பூரணமாக உள்ளன எனவும், அவை யாவும் உண்மையானவை எனவும், சான்றுப்படுத்துகிறேன். இவற்றில் ஏதேனும் பகுதி பூரணமற்றதாயின் அல்லது / அத்துடன் பிழையானதாயின் அதனால் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகிறேன். இதிலுள்ள எந்தத் தகவலையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம்:- ....................... திகதி:-..................................